




ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடியில் மாரியம்மன் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைப்பு பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, கன்னிவாடி பேரூராட்சி தலைவர் திருமதி ச.தனலட்சுமி சண்முகம், துணைத்தலைவர் திருமதி மு.கீதா முருகானந்தம், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருமதி மனோரஞ்சிதம், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன் உட்பட பலர் உள்ளனர்.

### ஆத்தூர் தொகுதி – கன்னிவாடி பேரூராட்சியில்

# ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் ஊரக திட்டப் பணிகள்!

## அமைச்சர் இ.பெரியசாமி தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல், ஆக.16 -

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தொகுதி கன்னிவாடி பேரூராட்சியில் ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சாலை பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நவாப்பட்டியில் புதியதாக பகுதி நேர நியாய விலைக் கடையை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சிகள் இ.பெரியசாமி அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, தமிழகத்தில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தாண்டில் சாலை வசதிகள், தெருவிளக்கு வசதிகள் ஏற்படுத்திடவும், குடிநீர் வசதி முழுமையாக வழங்குவதற்கு ஒரு பெரிய திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

காவிரி குடிநீர் திட்டம் ரூ.218 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் 196 இடங்களில் குடிநீர் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன. இந்தப் பணிகள் படிப்படியாக தொடங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலமாக பொதுமக்களுக்கு அதிகபட்சமாக குடிநீர் கிடைப்பதற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

பொதுமக்களுக்குத் தேவையான கல்வி வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் கிராமப்புற சாலை திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 10,000 கி. மீட்டர் தூரம் சாலைகள் ரூ.4000 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரூ.823 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளில் 12,000 வகுப்பறைகள் கட்ட திட்டமிடப்பட்டு, 6,000 வகுப்பறைகள் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு, அதில் 3,000 வகுப்பறை கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளன. அரசு பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத் திற்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. அதில் மாற்றுத்திறனாளிக்கான ஓய்வூதியம் பெறுவோர் குடும்பத்தில் உள்ள மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் ஆத்தூரில் கூட்டுறவுத்துறை சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ரெட்டியார்சத்திரத்தில் உயர்கல்வித்துறை சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என 2 கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆத்தூர் கல்லூரிக்கு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. ரெட்டியார்சத்திரம் கல்லூரிக்கு ரூ.20 கோடி மதிப்பில் முதற்கட்டமாக கட்டடம் கட்டுமான பணிகள் தொடங்கப்படவுள்ளது

கன்னிவாடி பேரூராட்சி பகுதியில் ரெட்டியார்பட்டி, கே.ஜி.ஆர்.ஆர். நகரில் ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக தார்ச்சாலை, கன்னிவாடி கால்நடை மருத்துவமனைக்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக் சாலை, கன்னிவாடி மாரியம்மன்கோவில் தெருவில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைத்தல் என மொத்தம் ரூ.2.14 கோடி மதிப்பீட்டிலான சாலைப்பணிகள் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. நவாப்பட்டியில் புதிய நியாய விலைக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் தேவைக்கேற்ப நியாய விலைக்கடைகள் பிரிக்க ப்பட்டு புதியதாக பகுதிநேர நியாய விலைக் கடைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அரசின் நலத்திட்டங்கள் சென்றடையும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கன்னிவாடி பேரூராட்சி தலைவர் ச.தனலட்சுமி சண்முகம், துணைத்தலைவர் மு. கீதா முருகானந்தம், ரெட்டியார் சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் சத்திய மூர்த்தி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) மனோரஞ்சிதம், திண்டுக் கல் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன், கூட்டுறவு துணைப்பதிவாளர்(பொது விநியோக த்திட்டம்) பேரூராட்சி உறுப்பினர்கள் கார்த்திகைச்செல்வி, சரண்யா, மணிமாலதி, திமகேஸ்வரி, மருதாயம்மாள், உமாஇந்திராகாந்தி, சர்புதீன், இளங்கோவன், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

